# இந்து தர்மம்

**1995 ஆனி ஸ்ரீ**



வெளியீடு :

இந்து சமயப் பேரவை — யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# " இந்து தர்மம் "

## மாதாந்த ஆத்மீக சஞ்சிகை

வியனுல கனைத்தையும் அமுதென நுகரும்
வேதவாழ்வினைக் கைப் பிடித்தோம்.

மலர் ௭ | 1995 | ஆனி

வெளியீடு :

இந்து சமயப் பேரவை — யாழ்ப்பாணம்

தனிப் பிரதி : ரூபா 10/-

ஆண்டுச் சந்தா : ரூபா 100/-

## பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| எமது சிந்தனை | 227 |
| தேரின் மகத்துவம் | 230 |
| முத்தமிழ் வாதவூரர் | 232 |
| கோயில்களிற் பூக்களை ஏன் பயன்படுத்துகிறார்கள்? | 233 |
| இந்துமத விரோத நடவடிக்கையை ஆட்சேபித்து இந்துக்கள் அணிதிரண்டனர் | 235 |
| சிறுவர் பகுதி: | |
| சிற்றுயிர்களும் வாழத்தான் வேண்டும்! | 238 |
| நவக்கிரகங்கள் பற்றி ஓர் ஆய்வு — செவ்வாய் | 239 |
| ஓரங்க நாடகம் | 241 |
| சந்தேகம் தெளிதல் | 244 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
யாழ்ப்பாணம்
பொதுசன நூலகம்
மாநகராட்சி
22-7-1995

உ
சிவமயம்

## எமது சிந்தனை

# அறிவியற் கோளாறு

அறிவு என்றால் என்ன? அதன் ஊற்று எது? காணாதவற்றைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருப்பதும் அறிவாகுமா? இவை போல்வன சில இந்நாளைய விவாதக் கூறுகள். கி. பி. 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாகார்ச்சுனர் முதல் இன்றைய புத்திஜீவிகள் வரை, இவைபற்றி, அவரவர் அவ்வப்போது கூறிய அபிப்பிராயங்களை ஒன்றாகக் கொட்டிக் கிளறிக் கீழறி மேலறியாகப் புரட்டி, அறிவு பற்றிய ஒரு திணறல் நிலையைத் தோற்றும் பாங்கு இன்றைய ஆய்வு வட்டங்களை ஆக்கிரமித்திருப்பது கண்கூடு. அதன் ஒளியில், நம்மவர் சிலர் தமது பாரம்பரியமான அறிவியலைப் பரீட்சிக்கும் யத்தனங்களுந் தலையெடுத்து வருகின்றன. சமீபத்திய ஆய்வேடொன்று, ''ஐம்புல அநுபவமே அறிவின் ஊற்று, அவ்வாறிருக்க ஐம்புல அநுபவத்திக்கு எட்டாத விஷயங்களையும் சைவ சித்தாந்தம் அநுபவம் என்கிறது, என்ன ஆச்சரியம்'' என்ற ஆதங்கத்தைப் புலப்படுத்துகிறது. அது நிச்சயமற்ற அறிவு எனத் தீர்த்துக் கட்டவும் பார்க்கிறது.

அறிவு எங்கே ஊறுகிறது என்ற கேள்வி சைவ சித்தாந்தத்தில் எழுகிறதில்லை. “கற்றனைத் தூறுமறிவு” என்ற திருவள்ளுவர் அது எங்கிருந்து? என்பது பற்றி ஏதும் நேராகச் சொல்லவில்லை. ஆனால் அதற்குக் காட்டிய உதாரண மூலம் உணரவைக்காமல் விடவுமில்லை. எங்ஙனம்? தோண்டத் தோண்ட ஊறும் மணற்கேணி அவரது உதாரணம். தோண்டப்படும் நிலத்திலிருந்தே நீருறுவது போல, கல்வியால் தாக்குண்ணும் ஆன்மாவிலிருந்தே அறிவு ஊறுகின்றது என்பது அவர் நிலை. இதன்படி அறிவின் ஊற்று ஆன்மாவே என்பதை ஆருந் தெரிந்து கொளல் அமையும்.

இங்ஙனம் சைவசித்தாந்தத்தில் குறித்த பிரச்சனைக்குரிய விடை தன்னொடு தானே அமைந்து கிடக்கிறது. எங்ஙனம்? சைவசித்தாந்தம் அறிவைப் பண்பாகக் கொண்ட ஒன்றுக்கிரண்டு மூலங்களைத் தனது அடிப்படை உண்மைகளாக ஏற்றிருக்கின்றது. ஒன்று மேற்குறித்த பசு; மற்றது பதி, இவ்விரண்டில் பதி தன்னிறைவான அறிவுப் பொருள். பசுவும் அறிவுப் பண்புடையதேனும் தவிர்க்கமுடியா வகையில் தனக்கிருக்கும் மறைப்புச் சாதனமான அறியாமை காரணமாகப் பதியினால் அறிவிக்கப்படுமளவில் மட்டும் அறியும் பாங்கினது. அப்படியானால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுவுக்கு அறிவுப் பண்புண்டென்பது அர்த்தமற்றதாமே எனில், அது தவறு. எங்ஙனமெனில், அப்பண்பு அதற்கில்லையெனில் பதி அறிவித்தும் அது அறிதல் கைகூடாதாம். அது சூரியன் ஒளி கொடுத்தும் பார்வை யில்லாத கண் பார்க்க மாட்டாமை போலாம் என்பது.

மேற் சொன்ன நாகார்ச்சுனர் முதலியோருக்கு இக் காட்சியில்லை. அதாவது அறிவில் தன்னிறைவான பதி யொன்றிருப்பதும் அதனால் அறிவிக்கப்படுதற்காம் பண்புள்ள பசு வொன்றிருப்பதும் பற்றிய காட்சி இல்லை. அவர்களது சமய சாஸ்திர ரீதியாகவே அது இல்லை. அதனால், அறிவின் ஊற்று எங்கே என ஆராயவேண்டிய தேவை அவர்களுக்குத் தவிர்க்கமுடியாத தேவை. அது பற்றி அவர்கள் பேரிற் குறை கொள்ளுதற்கு மில்லை. அவரவர்க்குள்ளது கொண்டுதானே அவரவர் பயன்பெற முடியும்.

இனி, அயலார் கருத்துக்களையும் நாம் அறியலாம். அறியத்தான் வேண்டும். ஆனால் நம் பாரம்பரியத்தை அவை முழுங்கிவிட அநுமதிக்கக் கூடாது. உறவு உறவானாலும் பறியிலே கைபோடவிடக் கூடாது என்றது இதற்கும் பொருந்தும். முயல் பிடிக்கத் தொடர்பவர் இடையில் விட்டு மற்றொன்றைத் தொடரின் முயல் கைப்படாது. அந்நோக்கில் அறிவுப் பரிவர்த்தனை மிகும் இந்நாளில் நம் அறிவுப் பாரம்பரியத்தை நாமறிந்திருக்க வேண்டியது அதி அவசியமாம்.

சிவன் முழுமுதல், முற்றறிஞன். அவனருளாலல்லது இங்காவதொன் றில்லை என்பது போல அவனறிவாலல்லது இங்கறிவதொன்றில்லை என்பதும் ஆம். பிள்ளையாரை நினைந்து மூன்றுமுறை குட்டிக் கும்பிடாமல் ஏடு தொடக்கும் வழக்கமில்லை. இது அதன் அடிப்படைப் பிரயோகமாகும்.

எனில், சிவனறிவால் ஆன்மா அறிதல் எப்படி நிகழும் என்பது கேள்வி.

உயிர் உடலில் விடப்படும் அதி ஆரம்பத்திலேயே உயிரின் அறிதல் தொடங்குகிறது. அதற்குரிய சாதனங்கள் படைப்போடு படைப்பாகவே இடம் பெற்றுவிடுகின்றன. அவற்றை இயக்கும் திருவருளும் திரோதானம் என்ற பெயரில் உயிரோடு உடனுறைகிறது. அது அச்சாதனங்களை உயிர் மூலமாக இயக்குவதனால் உயிருணர்வு பரந்து வெளியுலக விஷயங் களையும் ஈர்த்துக் கொள்கின்றது. அதன் மூலம் முன் சொன்ன அஞ்ஞான மறைப்புச் சிறிது விலகி உயிரறிவில் விருத்தியும் விளக்க மும் ஏற்படுகிறது. அவ்விருத்தி விளக்கம் ஆன்மாவின் கன்மாநுசாரமாக அதற்கு அவ்வப்போது வேண்டும் அளவுக்குத்தகவே அமையும். வெளி விஷயங்கள் புலன்கள் எனப்படும். அவை அறிவுவிளக்க சாதனங்களே அன்றி அவைதான் அறிவல்ல; அறிவின் ஊற்றுமல்ல. அறிவென்பது ஆன்மாவிடத்தில் ஏதோ ஒரு இனந் தெரியா நிலையில் – (crude form) அல்லது உத்தேசவடிவில் இருந்து கொண்டே இருக்கிறது. அவ்வப்போதைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மதேவைக்களவாக விரித்து விளங்க வைப்பதே வெளியிலிருந்து பெறும் புலன்களின் வேலை அந்தக்கரணங்கள் அவ்வேலைக்குதவும் கருவிகள், ஐம்பொறிகள் வெளிப்புலன்களுக்கு நுழைவாயில்கள். ஆன்மா வின் லௌகிகச் சார்புக் காலமாகிய பெத்தநிலைக் காலம் முழுதும் அறிவு நிகழ்பண்பு இதுவாயேயிருக்கும். அதன் மேல், அது (பெத்த நிலைக் காரணியாகிய) பாசத்தை விட்டுப் பதியை அறியுந் தேவைக்கு இப் புலன றிவு உதவ முடியாது. அவ்வேளைக்கு, அதுவரையும் ஆன்மா தன் அறிவு சாதனங்களைச் செலுத்தப் பின்னணியில் உதவிக் கொண்டிருந்த திரோ தானமே தன் 'கலர்' மாறி ஞானமாய் நின்று நேரடியாக அறிவிக்கும். அவனருளாலே அவன்தாள் வணங்கி என்று படிக்கிறோமே! அந்த அதன் தாற்பரியம் இந்த இதுவேதான்.

இந்நோக்கில் ஆன்மாவின் லௌகிக அறிவு, ஆன்மிக அறிவு இரண் டுக்கும் மூலம் சிவனறிவேதான். Sir Ramanathan, says in his key of knowledge that it is the true ego, Parama ahankara which alone knows itself and is the base of all knowledge and spiritual. சிவன றிவு, சிவன் அருள் இரண்டும் ஏன் பராசக்தியுங்கூட ஞானத்தின் ஒத்த நிலைகள். இச் சிவனறிவு தன்நிலையிற் சுத்த அறிவு, பேரறிவு, பரமாத்ம அறிவு, பரஞானம், பரம அகங்ஹாரம் எனப்படும். அதன் மூலம் ஆன்ம அறிவு இழக்கப்படும் நிலையில் அசுத்த அறிவு, சிற்றறிவு, சீவாத்ம அறிவு, சீவ அகங்காரம் என ஆன்மாவின் பெயராற் கூறப்படும். அது திரோ தானமாயில்லாமல் வெளிப்படையாய், நேரடியாய் ஆன்மாவுக்கு அறிவிக் கும் நிலையில் ஆன்ம அனுபவம் உலக அனுபவம் ஆதல்போல இந் நிலையில் அது சிவானுபவமே ஆம்.

ஆகவே புலன்களுக்கெட்டாத அறிவும் அனுபவமே என்பதில் ஆச்ச ரியப் படுவதற்கோ ஆதங்கமுறுதற்கோ ஏது யாதுமில்லை.

நமது நெடுங்கால பாரம்பரியத்துக்குரிய அறிவிலட்சணம் இதுவேதான். வேதாகமம், திருமந்திரம், திருக்குறள், திருமுறைகள், மெய்கண்ட சாத்தி ரங்கள் எல்லாம் ஏகோபித்துணர்த்தும் சைவசித்தாந்த அறிவிலட்சணம் இவ்வளவேதான். நாகார்ச்சுனர் கழுத்தைத் தொட்டுத் தொடர்ந்து இன்றள வும் வெளியாகிக் கொண்டிருக்கும் அறிவியல் இலட்சணம் வேறு. அது இதற்கு பகைப் புலமுமல்ல, நட்புப் புலமுமல்ல, நொதுமல் நிலையுமல்ல, அது – தன்போக்கு. அது சாது பாவங்களினாலும் வேறு. இதற்குள்ளது போல அதற்கு ஆஸ்திக நூலாதாரமுமில்லை.

இந்நிலையில் அதன் பார்வையில் இதைப் பரிசீலிக்கும் அறிவில் ஏதோ தவறிருத்தல் வெளிப்படை. நடுநிலையாளர் ஒருவர் பார்த்து இவ் வறிவில் ஏதோ கோளாறிருக்கு மெனில் அதை அல்லந் தட்டுக்கிடக் யாகும்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தேரின் மகத்துவம்

ஆத்மஜோதி நா. முத்தையா

தேர்கள் நமது புராதன கலைச் செல்வங்களின் மகிமைக்குச் சான்றாகத் திகழ்வன. பெருவிழாக்களில் இடம்பெறும் தேரோட்டங்கள் மக்கள் மத்தியில் சமய எழுச்சியையும் பேதமற்ற மனப்பான்மைகளையும் விருந்தோம்பும் பண்பாட்டையும் விளக்கக் காண்கின்றோம்.

தேர் நிர்மாணம் ஆழமான தத்துவப் பொருள்களை விளக்கி நிற்கும். முழு உலகமே தேரின் வடிவமாக, பிரபஞ்சசிருஷ்டி அனைத்தும் அதில் அடங்கிக் காட்சி அளிக்கும். ஆகவே இப்பிரபஞ்ச இயல்பை நன்கு தேர்ந்துகொள் என்ற சிறந்த அறிவுறுத்தலைக் காட்டி நிற்பது தேர்.

பிரபஞ்சத்தின் உள்ளேயும் வெளியேயும் நின்று அதனைப் படைத்தும் காத்தும் அழித்தும் மறைத்தும் அருளும் இறைவன், பிரபஞ்சமாகிய தேரின் உள்ளேயும் வெளியேயும் நின்று அருள்புரியும் திருவருட்காட்சியை நாமெல்லாம் காணும் நாள் தேர்த்திருவிழா நாளாகும். சிவபெருமானுடைய பஞ்சகிருத்தியங்களில் அழித்தல் தொழிலின் அறிகுறி நிகழ்வாக விளங்குவது தேர்த்திருவிழாவாகும்.

முதன்முதல் தேரோட்டிய பெருமை சிவபெருமானுக்கே உரியதாகும். தாரகாக்கன், கமலாக்கன், வித்தியுன்மாலி என்னும் முப்புரத்தசுரர்களையும், அழிக்கத் தேரில் புறப்பட்டார் சிவபெருமான். பூமியைத் தேராகவும் சூரியசந்திரர்களைச் சில்லுகளாகவும் கொண்டு அமைந்தது அத்தேர். மகாமேருமலையை வில்லாகவும் வாசுகி என்ற பாம்பை நாணாகவும் திருமாலை அம்பாகவும் கொண்டு புறப்பட்டார் இறைவன். அம்பாக இருந்த திருமால், 'நான்தானே முப்புரங்களையும் அழிக்கப் போகிறேன்' என்று தற்பெருமையுற்றார். இந்த நினைவை உணர்ந்த சிவபெருமான் புன்சிரிப்புச் செய்தார். அப்புன்சிரிப்பிலேயே முப்புரங்களும் அழிந்தன. திருமாலாகிய அம்பு பயன்படுத்தப்படவில்லை. முப்புரங்களோடு திருமாலின் அகந்தையும் அழிந்தது.

இதனைத் திருமூலர் அழகாகக் கூறுகிறார்.

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வாரே"

மும்மலங்களையும் அழித்தலே அழித்தல் தொழிலின் தத்துவமாகும்.

"ஊர்கூடித் தேரிழுத்தல்" என்றொரு பழமொழி வழங்கிவருவதை யாரும் அறிவர். ஒற்றுமைக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும் "அரிசிப் பொரியோடு திருவாரூர்த் தேரும்" என்றொரு பழமொழியும் உண்டு. திருவாரூரிலுள்ள தேரே உலகிலுள்ள தேர்களிலெல்லாம் மிகப்பெரியது. அதனை இழுக்கத் தொடங்கினால் அது இருப்புக்கு வந்துசேர ஒரு மாதகாலமாகும். அதிகாலை ஏழுமணிக்கு ஊரில் உள்ளோர் அனைவரும் வந்து வடம்பிடிப்பர். காலை எட்டு மணி வரை இழுப்பர். பத்து மீற்றர் தூரம் வரை தான் இழுக்கமுடியும். மாலை ஐந்து மணிக்கு வந்து இப்படியே ஆறுமணிவரை இழுப்பர். இப்படி இழுத்துமுடிய ஒரு மாதகாலமாகும்.

"சறுக்குக்கட்டை போடுதல்" என்ற பழமொழியும் தேரோட்டத்திலிருந்து பிறந்ததுதான். தேரை நேர்வழிப் பாதையில் கொண்டு செல்வதற்குப் போடும் தடைக்கட்டைக்கு சறுக்குக்கட்டை என்று பெயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரை உரிய வழியில் கொண்டு செல்வ தற்கு சறுக்குக்கட்டை போடுவதுண்டு. ஆனால் சிலர் நல்ல கருமங்கள் எல்லாவற்றுக்குமே சறுக்குக்கட்டை போடுவதுண்டு. தீயவழியில் செல்வதை சறுக்குக்கட்டை போட்டுத் திருப்பினால் அர்த்தமுண்டு. ஒரு சிலர் நல்லவற்றுக்கும் சறுக்குக்கட்டை போடுவதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர். அதில் அர்த்தமில்லை. அச்செயல் நீக்கப்படவேண்டும்.

பொதுவாக இறைவனை நாடி மக்கள் கோயிலுக்கு வருவதே வழக்கம். ஆனால் தேர்த் திருவிழாவிலே மக்களை நாடி இறைவன் வருகின்றான். கோயிலுக்குச் சென்று வழிபடமுடியாத மக்களின் பொருட்டு இறைவனை அவர்களின் அண்மைக்குக் கொண்டுவரும் முறையாக, தேர்த் திருவிழா ஆரம்பித்திருத்தல் வேண்டும். தேரிலே தெய்வத்தை எழுந்தருள வைத்து ஊர்வலம் வருவது மிகப்பழைய காலம் முதல் இருந்து வந்தது. கி. பி. 5ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலே இந்தியாவுக்கு வந்திருந்த சீன யாத்திரீகனான பாஹியன் தான் கண்ட தேரோட்ட விழாவொன்று பற்றித் தனது நூலிலே குறிப்பிட்டுள்ளார்,

தேர்த்திருவிழா என்றால் ஊர்மக்களின் உற்சாகம் கரைபுரண்டோடும். வடம் பிடிக்க மக்கள் முந்துவர். இதனை வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன் அவர்கள் ஒரு பாடலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

## வடம்பிடிக்க வாரீர் !

வடம் பிடிக்க வாரீர் — திருத்தேர்
வடம் பிடிக்க வாரீர்!

வடம்பிடித்தால் இறையுலகில்
இடம்பி டிக்கலா மென்று
மாதவத்தோர் ஓதுவதை
மதிப்புடனே எண்ணியிங்கு (வடம்)

ஆண்மை அழகு செல்வம்
அன்பு சிறந்த பக்தி
ஆரும் மதிக்கும் வளம் அமையும்
எனவே நீங்கள். (வடம்)

பொதுவாக ஆடவரே வடம்பிடித்து இழுப்பது வழக்கம். சில கோயில்களில் அம்மன் பவனிவரும் தேரை மகளிரே வடம்பிடித்து இழுக்கும் வழக்கமும் உண்டு. மாத்தளை முத்துமாரியம்மன் கோயிலிலும் கொழும்பு கொச்சிக்கடை - சிவன்கோயிலிலும், தெல்லிப்பளை - துர்க்கை அம்மன் கோயிலிலும் இவ்வழக்கத்தை இன்றும் காணலாம்.

தேர்த்திருவிழா சமூக ஒற்றுமைக்கும் கூட்டுறவுக்கும், கூட்டு உறவு முயற்சிக்கும் வழிகாட்டுவது. கவின்கலை யமைப்பிற் கடவுளைக் கண்டு நயக்கும் வாய்ப்பையும் அது மக்களுக்கு வழங்குகின்றது.

இந்த உடம்பு ஒப்பற்றதொரு தேர். உயிரானது உடம்பை இயக்கிக்கொண்டிருக்கின்றது. உடல் வெறுஞ் சடம். உடலாகிய தேர் தன்னை இயக்கிக்கொண்டிருப்பது உயிர் என்பதை அறிவதில்லை. உயிரும் ஒரு தேரே. உயிரை உயிர்க்குயிராம் இறைவன் இயக்கிக்கொண்டிருக்கின்றான். அதனால் இயவுள் என்றும் பெயருண்டு. இந்தப் பூமியும் இறைவனுக்கு ஒரு தேரே. பூமியாகிய தேரில் இறைவன் எழுந்தருள்புரியும் உண்மையை உணர்பவர்களுக்கு இவ்வுலகில் யாதுமோர் குறையில்லை. உயிரும் பூமியும் இறைவனுடைய சிறிய தேர்கள்.

'ஆலயத்துட் செல்லா தவரென் றிருப்பாரும்
சீலமுற வேயிழுக்கும் தேர்விழா – ஞாலமதில்
நல்ல பிரமோற் சவமென்னும் நாமமுறும்
எல்லவர்க்கும் சேரும் நல் இன்பு' (கி.வா.ஜ.)

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# முத்தமிழ் வாதவூரர்

## தெல்லிமாநகர், சிவஸ்ரீ சி. கணேசலிங்கக் குருக்கள்

சமயக் குரவர்கள் நால்வர்; சந்தான குரவர்கள் நால்வர். இவர்கள் யாவரும் இறையருள் பெற்று இனிய பாக்களை யாத்த பெற்றியினர். சமயாசாரியர்கள் நான்கு பேரும் நான்கு நிலைகளில் ஒவ்வொன்று விளக்கமுற நின்று முத்தியடைந்தார்கள். ஞானசம்பந்தப்பெருமான் தந்தை மகன் என்ற உறவு, மூன்று வயதிலே அவர் அழுத போது ஞானப்பால் கொடுக்கப்பட்டது. மேலும் அவரது தேவை அறிந்து பொற்றாளம், மூத்துப் பல்லக்கு யாவற்றையும் இறைவனே நல்கினார். நாவுக்கரசர் ஆண்டான் அடிமை என்ற சுபாவம். இவர் தொண்டின் சிகரமாகத் திகழ்ந்தார். சுந்தரருக்குத் தோழனாக விளங்கிப் பரவையாரிடம் தூதும் சென்றார். திருவாதவூராருக்கு நாயகன் நாயகி சுபாவத்திலே அநுக்கிரகித்தார். பாண்டியன் துன்புறுத்திய போது வாதவூரர் கூறுகின்றார்: 'முன்னர் அடியார்கள் பொருட்டு முப்புரங்களையும் தகனஞ் செய்தீர்! விடத்தையுண்டீர்!! இப்பொழுது அருள் புரியா விட்டால் இவை யாவும் பொய்யாகி விடுமன்றோ?'

முத்தமிழ் வாதவூரர் அமாத்தியப் பிராமண குலத்திலே சம்புபாதாசிரயருக்கும் சிவஞானவதி அம்மையாருக்கும் புத்திரராக அவதாரஞ் செய்தார். இவருக்கு உரிய காலத்திலே நாமகரணம், அன்னப் பிராசனம், உபநயனம் முதலாய சடங்குகள் நிறைவேற்றப்பட்டன ஈரெட்டு ஆண்டு வயது (பதினாறு) நிரம்ப முன்னரே வாதவூரர் சகல கலைகளையுங், கற்றுப் பாண்டித்தியம் பெற்றார். இவரது சிறப்புக்களைக் கேள்வியுற்ற அரிமர்த்தன பாண்டியன் இவரை அழைத்துத் "தென்னவன் பிரமராயன்" என்ற நாமத்தையுஞ் சூட்டி முதன் மந்திரியாக்கினார். திருவாதவூரர் அரசனது செங்கோலைத் திறம்பட நடாத்தி வந்தார். ஒரு தினம் பாண்டியமன்னன் இவரிடம் நாற்பத்தொன்பது கோடி பொன்னைக் கொடுத்துக் குதிரை வாங்கி வருமாறு அனுப்பினான். குதிரை வாங்கச் சென்ற முதன்மந்திரியார் திருப்பெருந்துறையில் ஞானாசாரியரைக் கண்டார். அவரிடம் ஒப்புவிக்கையில் பணத்தை ஒப்புவித்து விட்டார். ஞானாசாரியர் வாதவூரருக்கு மூவகைத் தீட்சைகளையும் நல்கினார்.

இச்செய்தியை அறிந்த பாண்டிய மன்னன் கோபங் கொண்டு வாதவூரரை அழைத்துச் சிறையில் இட்டான். இறைவனே நரிகளைக் குதிரைகளாக்கிக் கொண்டு வந்து அரசனுக்குக் கொடுத்தார். பின்னர் அன்று மாலை குதிரைகள் நரிகளாக மாறின. இதனால் மீண்டும் வாதவூரர் துன்புறுத்தப்பட்டார். ஞானாசாரியார் கங்கை மூலம் வைகையைப் பெருகச் செய்து அதன் சார்பில் செம்மனச்செல்விக்குக் கூலியாளராக வந்து பிரம்பினால் அடியும் பெற்றார். அதன் மேல் அரசிலிருந்து விலகிய மணிவாசகப் பெருமான் தில்லை சென்று திருச்சதகம் முதலாய திருவாசகப் பாக்களைப் பாடியருளினார். அங்கு வாதாடச் சென்ற ஈழத்துப் புத்தருடன் சமய வாதஞ் செய்து அதில் வெற்றி பெற்றார். ஈழமன்னன் மகளான ஊமைப் பெண்ணைப் பேசச் செய்தார். இவர் பாடிய திருவாசகப் பாக்களை இறைவனே அந்தணனாக வந்து எழுதும் பேறும் உளதாயிற்று. தில்லையுள்ளார் திருவாசகத்தின் பொருள் கேட்டபோது இறைவனே பொருளெனச் சுட்டிக் காட்டித் தம்முருவம் காட்டாது பாலுடனே மேவிய நீர்போல் இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கோயில்களிற் பூக்களை ஏன் பயன்படுத்துகிறார்கள்?

பிரம்மஸ்ரீ கு. சிவராஜ சர்மா

[ சைவசமய ஒழுக்க வழிபாட் டநுசரணைகள் ஒவ்வொன்றிற்கும் அதுவதற்குரிய உயர்தரமான அர்த்தமுண்டு. சம்பந்தப்படுஞ் சகல ஒழுக்க வழிபாட்டம்சங்களிலும் அதன் இருப்பைக் கண்டறியும் ஆவலைத் தூண்டவல்லது இக்கட்டுரை ] ஆ - ர்

கோயில்களில் பூக்கள் என்றும் அழகுக்கு மட்டும்தான் பயன்படுத்துகிறார்களா? அதனால் என்ன பயன்? சிலர் நாய், பூனை போன்ற செல்லப் பிராணிகளை வளர்க்கின்றார்கள். அவர்கள் வெளியிற் சென்று வரும்பொழுது அவர்கள் வருகை அறிந்து அவை நன்றி பாராட்டும். அதே போன்ற தன்மை தாவரங்களுக்கும் உண்டு. ஒருவர் ஒரு தாவரத்தை, உதாரணமாகப் பூக்கன்று, துளசி போன்றவற்றை வைத்து நீர் ஊற்றி வரும்பொழுது அந்தத் தாவரம் அவர்கள்மீது நன்றி பாராட்டும். ஆனால் அவை எமது உணர்திறனுக்கு அப்பாற்பட்ட நுண்மையான அதிர்வுகள் மூலமே வெளிப்படுத்துகின்றன. இதனைத் தம்மால் உணரமுடியாவிட்டாலும் அதனை வளர்த்தவர் கொழும்புக்குச் சென்று அங்கு அவருக்குத் துன்பம் நேர்ந்துவிட்ட சந்தர்ப்பத்தில் அச்செடி சிறிது வாடுதல் மூலம் தனது அன்பைத் திருப்பிச் செலுத்தும். இதனை நன்கு அவதானிப்பதன் மூலம் பார்க்க முடியும்.

இதே போன்ற தன்மை பூவிற்கும் உண்டு. இதனை 20ஆம் நூற்றாண்டில் நிரூபித்துள்ளார்கள். இதற்கென ஒரு விசேட புகைப்படக் கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒருவரின் கையில் பூவை வைத்திருக்கச் செய்யும்போது அவரின் வித்தியாசமான உணர்ச்சிகளுக்கேற்ப அந்தப் பூ நுண்ணிய அலைகளை உருவாக்கி அனுப்புகின்றது. இதனை மேற்கூறிய கருவி எங்களுக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

இதிலிருந்து அறிவது யாதெனில் நாம் இறைவனுக்கு அன்பாகப் பூக்கள், தோத்திரங்கள் சாத்தி வழிபடும்பொழுது நாம் பேசுவது, பாடுவது, வழிபடுவது போன்ற நிகழ்வுகள் உடனடியாக் நாங்கள் சமர்ப்பிக்கும் பூக்களினால் கிரகிக்கப்பட்டுப் பிரபஞ்ச முழுமையும் அனுப்பப்படுகின்றது. அவ்வாற்றால் இது உடனடியாக இறைவன் பாதத்திற்குப் போய்ச் சேருகின்றது.

பூக்களின் வடிவங்களை எடுத்து ஆராயும் பொழுது அவை ஒரு ‘ மைக் ’ போலத் தொழிற்படுவதற்கு வசதியாக அமைக்கப்பட்டுள்ளது புரியும். பெரிய பூக்களில் பாதிரி மிக விசேடமான வடிவம் உடையது. இது சிவபெருமானுக்கு விரும்பிய மலர். எமது வேண்டுதலை இது உடனடியாகக் கைலையங்கிரிக்கு அறிவித்துவிடும். இவ்வாறே வெவ்வேறு கிரகங்களுக்கும் வெவ்வேறு விசேட பூ, சமித்து, தானியம் உண்டு. இவை என்ன செய்கின்றன என ஆராயும் பொழுது ஒவ்வொரு கிரகங்களும் வெவ்வேறு திசை, வேறுவேறு வேகத்துடன் சுழல்கின்றன. இதனை நம் முன்னோர்கள் கி. மு. 4000 வருடங்களுக்கு முன்பே அறிந்து வைத்திருந்தார்கள். இதனால் ஒவ்வொரு தேவதைக்கும் பிரீதி செய்வதற்கு அவர்களுக்கு உரியன எது வென ஆராய்ந்து அவர்கள் வேகத்துடன் ஒத்த அதிர்வு உள்ள பூ, சமித்து தானியங்களைப் பயன்படுத்தினார்கள். அதாவது வானொலிப் பெட்டியில் அலைவரிசையை மாற்றிக் கொழும்பு, திருச்சி என்று எடுப்பதுபோல.

குருக்கள் ஐயாவிடம் பணம் கொடுத்து அருச்சனை செய்யும் பொழுது உங்களுடைய வேண்டுதல் மந்திரம் மூலம் சொல்லப்படும் பொழுது இப்பூக்கள் ஓர் மைக்காகத் தொழிற்பட்டு, பிரபஞ்சத்திற்கு அப்பாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பப்படும். இதனால் நாம் கோயிலில் செய்யும் வேண்டுதல் நிறைவேறுகின்றது. இதுவரை காலமும் காரணம் தெரியாமல் அர்ச்சனை செய்தவர்கள் இனி இரண்டு மடங்கு பணம் கொடுத்து வேண்டுதல் செய்வார்கள் என நினைக்கிறேன். பூவிற்கு மந்திரம் சொல்லிப் போட்டால் அப் பூ, தொடர்ந்து அறிவித்துக் கொண்டே இருக்கும். இதனால்தான் பூவை எடுத்துக் காதில் வைக்கிறார்கள். இது மூளைக்குப் பக்கத்தில் இருந்து அதிர்வுகளை உருவாக்குவதால் மனம் சந்தோசமடைகின்றது. இதே காரணத்தால்தான் இறைவன் நாமம் உச்சரித்துப் போடப்பட்ட பூக்கள், அதாவது நிர்மாலியங்கள் காலால் மிதிக்கப்படக் கூடாது என்று கூறுகின்றார்கள். 01-11-94 இரவு பீ. பீ. சீ. (B. B. C.) ஒலிபரப்பில் ''தாவரங்கள் பேசுகின்றன'' என்னும் நிகழ்ச்சியில் 'ஆமணக்கு' என்ற தாவரம் தண்ணீர் கேட்டு நுண் அதிர்வை உண்டாக்கிய சத்தத்தை ஒலிபரப்பினார்கள். இதை நேயர்கள் சிலர் காதாற் கேட்டிருப்பீர்களென நினைக்கின்றேன். பூக்கள் சாத்தப்படும்பொழுது கவிழ்த்துச் சாத்தக்கூடாது. சரித்து அதன் முன்பக்கம் நேரடியாகத் தெரியக்கூடியவாறு சாத்தவேண்டும். இதன் மூலம்தான் அவை அதிக மந்திரங்களைக் கிரகித்து, பிரபஞ்சத்திற்கு அனுப்ப முடியும். இதனால் எங்கள் வேண்டுதல் இறைவனுக்குத் தெரிந்து, உடனடியாக அநுக்கிரகம் கிடைக்கப்பெறுவோம். அன்பர்கள் இதை உணர்ந்து பயன்பெறுவார்களாக.

---

## தடாதகைப் பிராட்டியார் திருஅவதாரம்

மதுராபுரியை மலையத்துவச பாண்டியன் அரசு செய்து வந்தான். நெடுங்காலமாகியும் பிள்ளையில்லாமையினாலே, புத்திரகாமேட்டிகா யாகம் செய்தான். அந்த யாக முடிவில் பார்வதிதேவியார் மூன்று வயதுப் பராயமுடையவராய், மூன்று முலைகளையுடையவராய், பெண்மகவாகி வந்து பாண்டியன் மனைவியின் மடியில் இருந்தார்.

இதைக் கண்டு பாண்டியன், ஆண்மகவும் அல்லாததுடன், மும்முலைகளோடு கூடிய பெண்மகவுமாயிற்றே, என்று வருந்தினான். அப்போது ஆகாயவாணி ''நீ கவலைப்படாதே; ஆண்மகனாய்க் கருதி வேண்டிய முறைப்படி முடி சூட்டு; குமாரிக்கு நாயகன் வரும்போது நடு முலை மறைந்துவிடும்'' என்றது.

இதனைக் கேட்ட பாண்டியன் அளவிலா மகிழ்ச்சி கொண்டு, 'தடாதகைப் பிராட்டி' என்று பெயரிட்டு வளர்த்து வந்தான். அம்மையாரும் பெண்களுக்குரிய விளையாடல்களைச் செய்து கொண்டும், ஆளுகைக்குரிய பலவகைக் கல்விகளையும், நீதி சாஸ்திரங்களையும் கற்றுக் கொண்டும், பருவமடைந்தும் விட்டமையால், மலயத்துவசன் வெகு ஆடம்பரங்களுடன், அம்மையாருக்கு முடி சூட்டிய பின், வான் நாட்டையடைந்து விட்டான்.

தேவியார் சகல தேசத்து அரசர்களும் வணங்கும்படியாக, வீரமாகவும் ஒழுக்கமாகவும் முறை தவறாது அரசு செலுத்தி வந்தார். இந்த அம்மையை, விச்சுவாவசு என்னும் விஞ்ஞையன் மனைவி விச்சுவாவதி என்பவள், முன்னொருகால் தனக்கு மகளாக வேண்டும் என்று கேட்டுக் கொண்ட வரத்தின்படியே, விச்சுவாவதி மலயத்துவச பாண்டியன் மனைவியாக இருக்க, அம்மையார் தடாதகைப் பிராட்டியாக அவதரித்தார் என்பர் புராணகாரர்.

அம்மையார் திக்கு விஜயம் செய்யப்போய், ஒவ்வொரு திசையாய்ச் சுற்றி, ஈசான திசைக்குச் சென்றபோது. சிவகணங்களுக்கும் அம்மையின் சேனைகளுக்கும் யுத்தம் மூண்டு, பரமசிவன் சேனைகள் தோற்க முடிவில் பெருமான் தோன்றி வர, அவரைக் கண்டவுடன், அம்மையின் நடுவில் இருந்த தனம் மறைந்துவிட்டது, அப்போது பெருமான் ''நீர் மதுரைக்குச் செல்லும்; யாம் வந்து மணந்து கொள்வோம்'' என்றார். அப்படியே சௌந்தர பாண்டியன் என்னும் பெயரோடு வந்து மணந்து, மதுரைமாபுரியை ஆண்டு கொண்டிருந்தார்.

★ ✠ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமத விரோத நடவடிக்கையை ஆட்சேபித்து இந்துக்கள் அணிதிரண்டனர்

யூன் மாதம் 15-ம் நாள் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வொன்று இடம்பெற்றது. இந்து சமயப் பேரவையின் அழைப்பின் பேரில் யாழ்ப்பாண மாவட்டத்தின் மூலை முடுக்குகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான இந்துக்கள் பால், வயது தொழில் என்ற வேறுபாடின்றி ஒன்றுதிரண்டு ஸ்ரீலங்கா அரசின் இந்துமத விரோத நடவடிக்கைகளை ஆட்சேபித்துப் பிரார்த்தனையையும் கண்டனப் பேரணியையும் நடாத்தினர்கள். இந்துக் குருமார்கள், இந்துப் பெரியார்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்க்ள், அரச, தனியார்துறை ஊழியர்கள், வர்த்தகர்கள், பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள், இந்து அமைப்புக்களின் பிரதிநிதிகள், கோயில் நிர்வாகிகள், என்று பல்வேறு துறையைச் சேர்ந்தவர்களும் இந்துக்கள் என்ற ஒரே உணர்வுடன் இந்நிகழ்வில் கலந்து கொண்டு தமது மன உணர்வுகளையும் ஸ்ரீலங்கா அரசு மீதான தமது அதிருப்தியையும் வெளிக்காட்டியுள்ளனர். யாழ்ப்பாணம் தமிழ், சைவம், சைவக் கலாசாரம் ஆகிய வற்றின் நிலைக்களன்.

19-ம் நூற்றாண்டில் நாவலர் பெருமான் தமிழ், சைவம், சைவக் கலாசாரம் ஆகியவற்றிற்கு அந்நிய ஏகாதிபத்தியவாதிகளால் ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தல்களுக்கு எதிராக ஒன்றிணையுமாறு இந்துக்களுக்கு அறைகூவல் விடுத்தார். பேரவை ஸ்ரீலங்கா அரசின் இந்துமத விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக ஒன்றிணையுமாறு இந்துக்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா அரசும் அதன் இராணுவமும் கடந்த 12 ஆண்டுகளில் முப்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்களைக் கொன்று குவித்துள்ளது. இவர்களில் பெரும்பான்மையோர் இர்துக்கள். தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் இரண்டாயிரத்தக்கும் அதிகமான இந்துக் கோயில்கள் சேதமாக்கப்பட்டு அல்லது அழிக்கப்பட்டுள்ளன. வரலாற்றுப் பெருமை மிக்க இந்துக் கோர்யில்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு அவை மாசுபடுத்தப்பட்டுள்ளதுடன் பூசைகளும் தடைபட்டுள்ளன. இந்துக்களின் வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டுள்ளது. இந்துக்கள் பெரும்பான்மையினராய்வாழும் வட பிரதேசத்தின் மீது போக்குவரத்துத் தடை, பொருளாதாரத் தடை என்பன விதிக்கப்பட்டுள்ளதுடன் இந்துக் கோயில்களுச்குத் தேவையான பூசைத் திரவியங்களுக்குக் கூடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பெரும்பான்மைச் சிங்களவரின் பௌத்த மதத்துக்கு முதன்மை அளித்துப் பாதுகாக்கும் ஸ்ரீலங்கா அரசு பௌத்த விகாரைகளை நிறுவுவதற்கும் பெரகரா, வெசாக் முதலாய நிகழ்ச்சிகளை கொண்டாடும் பல கோடி ரூபா அரச நிதியைப் பயனபடுத்துகின்றது. பௌத்த குருமார்களுக்கு அரச மரியாதை செலுத்தப்படுகின்றது. ஆனால் இந்து ஆலயங்கள் மீது எறிகணைத் தாக்குதல்களும் விமானத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டு அவை அழிக்கப்படுகின்றன. உற்சவகாலங்களிலும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு பக்தர்கள் கொல்லப்படுகின்றனர். இந்துக் குருமார்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். அழிக்கப்பட்ட ஆலயங்களைப் புனரமைக்குமாறு பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டபோதும் அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்துக் கோயில்களில் அமைக்கப்பட்ட இராணுவ முகாம்கள் அகற்றப்படவுமில்லை. கீரிமலை முதலாய புனித தீர்த்தத்திற்குச் சென்று சிராத்தக் கடமைகளை நிறைவேற்றும் உரிமை கூட இந்துக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. இந்துக் கோயில்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறி முதல் செய்யப்படுகின்றன. இந்துக் கோயில்களின் முக்கியத்துவத்தைக் குறைக்கும் வகையில் அவற்றுக்குச் சமீபமாக பௌத்த விகாரைகள் அரசாங்க ஆதரவுடன் அமைக்கப்படுகின்றன.

அரசாங்கத்தின் இத்தகைய இந்து சமய விரோத நடவடிக்கைகளைக் கண்டித்து இந்துசமயப் பேரவை ஒழுங்கு செய்த இக் கண்டனப் பேரணியில் இந்துக்கள் ஆயிரக் கணக்கில் கலந்து கொண்டு தங்கள் உணர்வுகளையும், அரசு மீதான தமது அதிருப்தியையும் வெளிக்காட்டியுள்ளனர். என்றுமில்லாதவாறு இந்துக்கள் ஒன்று திரண்டு ஒரே குரலில் அரசுக்குத் தமது எதிர்ப்புணர்வுகளைத் தெரிவித்துள்ளனர். இப் பேரணி சம்பந்தமாக இந்து சமயப் பேரவை பல்வேறு பிரதேசச் செயலர் பிரிவுகளிலும் நடத்திய கருத்தரங்குகளில் இந்துக்கள் ஒற்றுமைப்பட்டு ஒரே குரலில் தமது உரிமைகளை வலியுறுத்த வேண்டுமென்றும் இந்து சமயத்திற்கு ஏற்படும் இடையூறுகளைத் தடுக்க வேண்டுமென்றும் இந்துசமயப் பேரவையைக் கட்டி எழுப்ப வேண்டுமென்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இந்துக் கோயில் நிர்வாகங்களில் ஏற்படும் சச்சரவுகள் நீக்கப்பட்டுத் தர்மகர்த்தாக்கள் பக்தியுடனும் விசுவாசத்துடனும் தமது பணிகளை ஆற்றுவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது. தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தி சில கிறிஸ்தவக் குழுக்கள் மேற்கொண்டுவரும் மதமாற்ற நடவடிக்கைகள் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்ற கருத்து எல்லா இடங்களிலும் வலியுறுத்தப்பட்டது.

இந்து சமயப் பேரவை, - இந்து சமயம் இந்துக் கலாசாரம் ஆகியவற்றைப் போற்றிப் பேணுதல், இந்துக்களின் நலன்களையும், உரிமைகளையும் பாதுகாத்தல், உலக இந்துக்களிடையே புரிந்துணர்வையும் நட்புறவையும் ஏற்படுத்தல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட ஒரு இந்துசமயக் கூட்டு அமைப்பாகும். இதில் எல்லா இந்து அமைப்புக்களும், கோயில் பரிபாலனசபைகளும் தனிப்பட்ட இந்து அபிமானிகளும் உறுப்பினராக முடியும். அனைவரும் உறுப்பினராகிப் பேரவையை வலுப்படுத்தி எமது உரிமைகளை வென்றெடுக்க ஓரணியில் திரளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

---

## புறநிலைக் கருவிகள்

1. பிருதுவியின் ( நிலம் ) கூறு
   மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை

2. அப்புவின் ( நீர் ) கூறு
   ஓடுநீர், உதிரம், சுக்கிலம், மூளை, மச்சை

3. தேயுவின் ( தீ ) கூறு
   ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பல்

4. வாயுவின் ( காற்று ) கூறு
   ஓடல், நடத்தல், நிற்றல், இருத்தல், கிடத்தல்

5. ஆகாயத்தின் ( ஆகாயம் ) கூறு
   காமம், குரோதம், உலோபம், மதம், மாச்சரியம், பூதகாரியங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம்
யாழ்ப்பாணம்



## விருந்தோம்பல்

1. இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

வீட்டில் மனையாளோடு கூடி, பொருளைப் பேணி, இல்லறத்தில் வாழ்வதன் நோக்கு. விருந்தினரைப் போற்றும் உபகாரஞ் செய்தற் பொருட்டாம்.

2. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

வீட்டில் விருந்தினர் இருக்க அவர்களுடன் சேர்ந்து உண்ணாது தான் தனித்து உண்ணுதல், உண்பொருள் அமிர்தமானாலுங்கூட விரும்பத் தக்கதன்று. "மருந்தேயாயினும் விருந்தோடுண்"

3. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று.

தினமும் தன்னை நோக்கிவரும் விருந்தினரைப் போற்றுபவனுடைய வாழ்வில் வறுமை வந்து கெடுவதில்லை.

4. அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்.

முகமலர்ச்சியோடு விருந்தினரைப் போற்றுபவனுடைய வீட்டில் திருமகள் அகமலர்ச்சி யோடு வாசம் செய்வாள்.

5. வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்.

விருந்தினர் உண்டபின் மிகுதியை உண்பவனின் விளைநிலம் தானே பெருகி விளையும்.

6. செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

தன்னிடம் வந்த விருந்தினரைப் பேணி, மேலும் வரவிருக்கும் விருந்தினரை எதிர் பார்த்திருந்து உண்பவன் மறுபிறப்பில் தேவர்களுள் ஒருவனாவான்.

7. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

விருந்து பேணுதலின் பயன் இவ்வளவு என்று அளவிடமுடியாது. அது விருந்தினரின் தகுதிக்கு ஏற்றவாறு அமையும் என்பதாம்.

8. பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

தேடிய பொருள் கொண்டு விருந்தினரைப் பேணாதோர், பொருளைப் பாதுகாத்தும் ஒரு பற்றுக்கோடும் பெற்றிலமே என வருந்தும் நிலைக்காளாவர்.

9. உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.

பொருளிருந்தும் விருந்தோம்புதலைக் கைக்கொள்ளாதிருக்கும் அறிவீனம் செல்வத்துள் வறுமையாகும். அது அறிவிலிகளிடம் உண்டு.

10. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

மோந்தவிடத்தே அனிச்சம்பூ வாடும். ஆனால் முகம் வேறுபட்டு நோக்குமளவிலேயே விருந்தினர் முகம் வாடும். (விருந்தினரை முகமலர்ந்து வரவேற்றல் பிரதானம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## சிறுவர் பகுதி

# சிற்றுயிர்களும் வாழத்தான் வேண்டும்!

(படைப்பு: ம. சி. சி.)

பாலர்களே!

சிறுவயதிலிருந்தே எல்லா உயிரினத்தையும் அன்பாக நேசித்துப் பழகவேண்டும். பிரதானமாக ஐந்தறிவுள்ள மிருகங்கள், பட்சிகள், பூச்சிகள் மீது இரக்கம்காட்ட வேண்டும். "காகத்துக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு" என்று சொல்வது உங்களுக்குத் தெரிந்தது தானே! பிறர் பிள்ளையைத் தடவிக்கொடுத்தால் தனது பிள்ளை தானாக வளரும் என்று உங்கள் பாட்டி சொல்வதைக் கேட்டிருப்பீர்கள்தானே!

நீங்கள் எல்லோரும் திருக்குறளைப் படித்துவருவது தெரியும். திருவள்ளுவப்பெருமான் 'இன்னா செய்யாமை' என்ற பகுதியில் ஒரு அருமையான குறளைப் படைத்துள்ளார். நீங்கள் இன்றே அந்த அதிகாரத்திலுள்ள பத்துக் குறளையும் பத்து வினாடியில் மனனம் செய்துவிடுங்கள். உடனே தெய்வத்துள் வைத்துப் போற்றப்படுவீர்கள். அக்குறளை இப்போது என்னுடன் படியுங்கள்.

அறிவினால் ஆகுவது உண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை. — குறள்: 315

இதன் பொருளைப் பார்ப்போம்; அறிவுள்ள மனிதன் ஏன் பிறருக்குத் தீங்கு செய்ய வேண்டும்? பிற உயிருக்கு உண்டாகும் துன்பம் தமக்குவரும் துன்பத்தைப் போலத்தானே இருக்குமென்று உணராவிட்டால், அறிவினால் என்ன பயன்?

என் அருமைக் குழந்தைகளே! அமெரிக்காவின் தலைவர் ஆபிரகாம்லிங்கன் என்பவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள்தானே! அவர் ஒருநாள் தமது குதிரைமீது சவாரி செய்துகொண்டு வீதிவழியே சென்றார். இவரைத் தொடர்ந்து இவரது சேனாதிபதியும் இன்னும் சில படைவீரர்களும் குதிரைகள்மீது வந்து கொண்டிருந்தனர். சற்றுத் தூரத்தில் ஒரு கருவண்டு முதுகு அடியுண்ணப் புரண்டபடி அப்படியும் இப்படியும் தனது உடம்பை அலைத்துத் தனது கால்களில் நிற்க மிகவும் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருப்பதை லிங்கன் பிரபு கண்டுவிட்டார். குதிரையின் "டப் டப்" என்ற கால்களின் சத்தத்தைக் கேட்ட வண்டானது, மனம் பீதி கொண்டு செய்வது தெரியாது திகைத்த வண்ணம் கல்லாகப் படுத்துவிட்டது. பாவந்தானே! ஆபிரகாம் பிரபு தனது குதிரையை நிறுத்தினார்; இறங்கினார். உடனே வண்டைத் தனது கையில் எடுத்தார்; நிறுத்தினார்; சந்தடி இல்லாத இடத்தில் வைத்தார். அது உடனே "ஜில் ஜில்" என்று சிறையடித்துப் பறந்தேவிட்டது.

தங்களது எஜமானன் என்ன செய்துள்ளார் என்பதை அறிய விரும்பிய வீரர்கள் "தலைவரே! குதிரையிலிருந்து இறங்கி ஏதோ செய்தீர்களே! என்று கேள்வியை முடிக்காமல் பிரபுவின் பதிலை எதிர்பார்த்தனர்.

ஒரு புன்சிரிப்புடன் 'இப்போது நான் மிகவும் அமைதியடைந்தவனாகி உள்ளேன்' என்றார்.

குழந்தைகளே! 'வண்ணத்துப்பூச்சி, ஓணான், அட்டை ஆகிய சிற்றுயிர்களுக்கும் தீங்கு விளைக்க வேண்டாம்' என்று ஆபிரகாம்லிங்கன் கூறுவது உங்களுக்குக் கேட்கிறதல்லவா? சரி, சகல ஜீவராசிகளும் முழுவாழ்வு வாழட்டும். அவற்றைத் தம்பாட்டில் இயங்க விட்டுவிடுங்கள்.

⁂ ⁂ ⁂



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

யாழ்ப்பாணம் ... நூலகம்

நவக்கிரகங்கள் பற்றி ஓர் ஆய்வு

# செவ்வாய்

## [ பகவான் அங்காரகன் ]

மாவை ஆதீனகர்த்தா, மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்

சிவபெருமான் உமாதேவியாரைப் பிரிந்து கல்லால மர நிழலில் யோக நிலையில் இருந்தபோது நெற்றிக் கண்ணிலிருந்து நீர்த்துளியொன்று பூமியின் மேல் வீழ்ந்தது. அந்நீர்த்துளியிலிருந்து அவதரித்தவரே மங்கலன் என்ற அங்காரகன். இவர் பூமியின் மகன் என்றும் அழைக்கப்பட்டார். பாரத்வாஜரிஷியின் உருத்திராக்க – மணியிலிருந்து பிறந்து பூமாதேவியால் வளர்க்கப்பட்டவர் என்றும், தக்க யாகத்தை அழிவு செய்த வீரபத்திரரே சீற்றம் தணிந்து அங்காரக வடிவம் தாங்கினார் எனவும் மத்ஸ்ய புராணக் கதைகளுண்டு. ''கு'' என்றால் பூமி. பூமாதேவியினால் வளர்க்கப்பட்டு பூமியின் புத்திரனானதால் குஜன் எனப்பட்டார். [கு ஜன் (ஜ:) பூமியினால் பெற்றெடுக்கப்பட்டவர் எனவுமாம்]

ஒரு தாயின் சம்பந்தமில்லாது அவதரித்தவரே அங்காரகன் ஆவார். செவ்வாய் முருகப் பெருமானது அம்சம் கொண்டவரெனச் சோதிட நூல்கள் குறிக்கின்றன. சிவப்பு நிறமானவர். அழகுடன் ராஜஸகுண சம்பந்தமுடையவர். கிரக பதவியில் மூன்றாம் இடத்தினைப் பெறுபவர். விண்ணில் செவ்வொளி வீசுவதால் செம்மீன் என ''முந்நீர் நாப்பண் திமில் சுடர் போலச் செம்மீன் இமைக்கும் மகா விசும்பின்'' எனப் புறநானூறு இவரைப் போற்றுகின்றது.

அங்காரகன் குழந்தைப் பருவத்தில் பாரத்வாஜரிஷி மூலம் பல கலைகள் பயின்று தவம் செய்த சமயம் அவரது உடம்பிலே யோகாக்கினி கொழுந்துவிட்டெரிந்தது. இதன் பயனால் நவக்கிரகத்தில் ஒரு பதவி கிடைத்தது.

செவ்வாய் தமிழ்க் கடவுளெனவும் போற்றப்படுவதோடு முருகப் பெருமானின் அம்சமும் கொண்டதனால் இவருக்கு அதிபதி சுப்பிரமணியர் என்றும் சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. இதனால் தமிழ் நாட்டில் பழனி, வைத்தீஸ்வரன் கோயில், திருச்சிறுகுடி எனும் தலங்கள் செவ்வாயோடு சம்பந்தப்பட்ட தலங்கள் எனப்படுகின்றன. வைத்தீஸ்வன் கோவிலில் செவ்வாய்க் கிரக மூர்த்திக்குத் தனிக் கோவிலுமுண்டு. இங்குதான் செவ்வாய்க்கு வைத்தீஸ்வரனது அருளால் கிரக பதவி கிடைத்ததென அத்தலபுராணம் கூறுகிறது. பாரத்வாஜ கோத்திரத்தில், க்ஷய வருஷ பத்ரபத சுக்கிலபக்ஷ துதியையில் பூர நட்சத்திர தினத்தன்று அங்காரகர் உதயமானவர் எனக் கணக்கிடப்படுகிறது. கிரக மண்டலத்தில் சூரியனுக்குத் தெற்கே முக்கோண வடிவில் பிரகாசிப்பவர் இவர். இவருக்கு மாலினி, சுசீலினி என்ற இரு மனைவியருமுண்டு.

செவ்வாய்க்கிரக மூர்த்தி சிவந்த ஆடைப்பிரியன், செவ்வண்ண மலர்களில் பிரியங் கொண்டவர். கிரீடத்துடன் கூடியவர். நான்கு கரங்களில் சக்தியையும் கருணையையும் வலக்கரங்களிலும், ஈட்டியும் மழுவும் இடக்கரங்களிலும் தாங்கியவர். சிவந்த செம்மறி ஆட்டை வாகனமாகக் கொள்பவர். எட்டுக் குதிரைகள் பூட்டிய பொன் வண்ணத் தேரிலும் பவனி வருபவர். அன்னப் பறவையையும் வாகனமாகக் கொண்டவர்.

சந்தனத்திற் செஞ்சந்தனத்தையும், தூபத்தில் வெண்குங்கிலியத்தையும், மலர்களில் செண்பகத்தையும், இரத்தினங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளிலே பவளத்தையும், தானியங்களிலே துவரையையும், உலோகத்தில் செம்பையும் சமித்திலே கருங்காலியையும், நிவேதனத்தில் துவரம்பருப்புக் கலந்த சம்பா அரிசிச் சாதத்தையும் பிரீதியாகக் கொள்பவர்.

செவ்வாய் க்ஷத்திரிய வர்ணத்திற்குரியவர் ஆண்மையுடன் தேசாதிபதி உத்தியோகத்திற்குரியவர்; அதிதேவதை சுப்ரமண்யர்; பிரத்யதி தேவதை பூமாதேவி; பூதாதிபதி தேயு; விரும்பிய காலம் பகல்; குரூர சுபாவம்; பாபி. இவரது சொந்த ராசி மேடமும் விருச்சிகமும் ஆகும். மகரத்தில் உச்சமும், கடகத்தில் நீசமுமாவார். நாலு, ஏழு, எட்டாம் பார்வையாக நோக்குவார். இவரது மித்திரகிரகங்களாக சூரியன், சந்திரன், குருவும் சமமாக சுக்கிரனும் சனியும் சத்துருவாக புதனும் கொள்ளப்படும்.

செவ்வாய்க்கிரக மூர்த்தி திருமண விடயங்களில் பாதிப்புக்களையும் ஏற்படுத்துபவர். இதனையே செவ்வாய் தோஷமென்பர். செவ்வாய்க்கிரகம் ஆண் ஜாதகத்தில் 1, 2, 4, 7, 8, 12 இலும், பெண் ஜாதகத்தில் 7 – ம், 8 – ம் இடங்களிலும் இருப்பின் தோஷமென்பர். மேலும் ஜாதகங்களில் மேடம், விருச்சிகம், மகரம் ஆகிய ராசிகளில் அமர்ந்து அந்த ஸ்தானங்கள் 4 – ம், 7 – ம், 8 – ம் இடங்களாக வாய்த்தால் தோஷமில்லையென்றும் 1, 2, 4, 8, 12 – ம் இடங்களிலிருக்கும் போதும் அவை சர ராசிகளானால் தோஷமில்லையென்றும் குரு, புதன் கிரகங்களோடு சேர்ந்தாலும் அல்லது இவர்களது பார்வை பெற்றாலும் செவ்வாய் தோஷ பரிகாரமுண்டு எனவும் சோதிட நூல்கள் குறிக்கின்றன.

செவ்வாய்க் கிரக மூர்த்தி ரத்தசம்பந்தமுடைய சகோதரகாரகர் ஆவார். பூமி, பெருந்தன்மை, கண்டிப்பு, வைராக்கியம், பகைவரை எதிர்த்துச் செல்லும் ஆற்றல் என்பவற்றைக் கொடுப்பவர். நிலத்தின் வருமானங்களைத் தரவல்லவர். வெட்டுக் காயம், ரணம் என்பவற்றைத் தீர்ப்பவர். பசு, தயிர் முதலியவற்றினைப் பெருக்குபவர். துன்பத்தினையும் தைரியத்தையும் தரவல்லவர். நல்லோர் சபையில் மதிப்பு வளருமாறும் அருள் செய்பவர்.

செவ்வாய்க்கிழமை விரதம் இவரருள் பெறற்கு உகந்தது. முத்துக்களில் செவ்வொளி வீசும் முத்து அரிதாகக் கிடைக்கும். இதற்கு அங்காரக முத்து எனப் பெயர். சிலப்பதிகாரத்தில் இது அறியப்படுகிறது. செவ்வாய்கிரகமூர்த்தி தேசாதிபதிக்கு அதிதெய்வமாவார் எனலும் கருதத்தகும்.

செவ்வாய்க்கிரக பாதிப்புடையவர்களும், அக்கிரக அருள்வேண்டி வாழ விரும்புகிறவர்களும் செவ்வாய்க்கிழமைகளில் செவ்வாய்க் கிரகத்திற்குச் செவ்வண்ணப் பூவால் அஷ்டோத்தரம் செய்வித்து அதிதேவதையான முருகப் பெருமானையும், துர்க்கை அம்பாளையும் வழிபட்டுச் செவ்வாய், காயத்ரி மந்திரம், தியானம், கவசம் என்பவற்றைப் பக்தி சிரத்தையோடு வழிபட்டும் வேண்டிய பலனைப் பெறலாம்.

வசனநல் தைரியத் தோடு மன்னவர்
சபையில் வார்த்தை
புசபல பராக்கிர மங்கள் போர்தனில்
வெற்றி ஆண்மை
நிசமுடன் அவர வர்க்கு நீணிலம் தனில
ளிக்கும்
குசனின் மகனாம் செவ்வாய் குரைகழல்
போற்றி போற்றி.
[ துதிப்பாடல் ]

‘ தரணீ கர்ப்ப ஸம்பூதம் வித்யுத்
காந்தி ஸமப்ரபம்
குமாரம் சக்தி ஹஸ்தம் ச மங்களம்
ப்ரணமாம்யஹம்’ – ( அங்காரக துதி )
“ வீர த்வஜாய வித்மஹே விக்ன
ஹஸ்தாய தீமஹி
தந்தோ பௌம: பிரசோதயாத் ”
— காயத்ரி

[கு ‣ பு: செந்நிற மேனியுடைமை பற்றி அங்கராகன் என்றான பெயர் ‘அங்காரகன்’ என ஒலிப் பிறழ்வுற்றிருக்கும் போல் தோன்றுகிறது. அங்கம் – மேனி, ராகம் – சிவப்பு.
ஆ – ர்.]

( தொடரும் – புதமூர்த்தி )

✳ ✳ ✳



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

ஓரங்க நாடகம்

# சொற்பதம் கடந்த பொருள்

0 -0 -0 -0 -0 -0 -0 -0 -0 -0 -0 -0 -0

திருமுறைப் பாராயணச் செல்வர், சிவ சண்முகவடிவேல்

## காட்சி I

மணிவாசகரின் பழங் குடில்

மணிவாசகர் தமது குடிலில் தியானத்தில் அமர்ந்திருக்கிறார். சிவபெருமான் ஒரு முதிர்ந்த அந்தணர் கோலத்தில் எதிராகக் காத்து நிற்கிறார். மணிவாசகர் விழிப்பு நிலைக்கு வந்ததும்,

மணிவாசகர்: வாருங்கள் அந்தணரே! மறையவரைக் கால்கடுக்கத் தாமதிக்க வைத்து விட்டேன்!!

மறையவர்: அப்படிச் சொல்லக் கூடாது! அந்நிலை ஆருக்கும் வந்து வாய்ப்பது அரிது! அரிது! அஞ்ஞானத்தைக் கைவிட்டு விஞ்ஞானமில்லாமல் மெய்ஞ்ஞானத் திற்கு அப்பால் மெய்ப்பொருள் ஞானக்கலப்பில் உயிரின் களிப்பு! அப்பப்பா ...... ! அது சொலற்கரிது செயற்கரிது! துரியாதீத நிலை ......!

மணி : என் பழங் குடிலில் எழுந்தருளிய பரனான அந்தணனாரே! நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத் தாயிற் சிறந்த தயாவான தாங்கள் அதிகம் புகழ்ந்து விட்டீர்கள்! அமர்ந்து கொள்ளுங்கள்.

மறை : உங்கள் எண்ணம் போலவே! ( அமருதல் )

மணி : முன் பின் கண்டதும் இல்லை. கேட்டறிந்ததும் இல்லை. தாங்கள் யாரோ? எங்கிருந்து வருகிறீர்கள்?

மறை : யாம் பாண்டி மண்டலத்திருப்போம்.

மணி : ஆ! பாண்டிமண்டலம் ! நன்று! நன்று! ஆண்டிருந்து ஈண்டு சோழமண் டலத்திற்கு வந்தது எதன் பொருட்டாகவோ?

மறை : தங்களைக் காண்டலே கருத்தாக வந்தோம்.

மணி காரியம் யாதோ?

மறை : நுங்களைத் திருப்பெருந்துறையில் ஆண்டருளிய அந்தணனாரின் ஆஞ்ஞையே யாகும் ..... !

மணி : கருதிற்று என்னையோ?

மறை : புண்ணிய மன்றில் ஆடும் புனிதரைப் பாண்டிய மன்னன் முன்னிலையில் பரியில் ஏறப் பண்ணி — பரிமேலழகராகப் பண்ணும் நும் பெருமையாலே பாண்டிநாடு பெருவாழ்வு பெற்றது!

மணி : தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.

மறை : பொன்பொலி மன்றில் எய்திப் புத்தரை வாதில் வென்றது கேட்டதும் யாவரும் மகிழ்ச்சி கொண்டார்.

மணி : வேண்டத் தக்கது அறிவோய் நீ, வேண்ட முழுதும் தருவோய் நீ!

மறை : ஆதியை மன்றுளாடும் ஐயனை அன்பினாலே ஓதிய தமிழின் பாடல் எழுதல் வேண்டும்.

மணி : கருத்தோடு வந்த காரியம் அதுதானோ! ஆகட்டும்! ...... எழுதுங்கள்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமச்சிவாய வாஅழ்க நாதன் றாள்வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க ..........
சிவனடிக்கீழ்ப்

பல்லோரு மேத்தப் பணிந்து—.......

மறை : (எழுதுகிறார்) உமையொரு பாகனாரைக் கோவை பாடுதல் வேண்டும்.

மணி : பாவை பாடிய வாயால் கோவை பாடுவதா?

மறை : ஆம்! அதைப் புவியுள்ளோர் புகன்று அவர் இடர் அகலப் பாடத்தான் வேண்டும்.

மணி : ம் ... நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே...... எழுதுங்கள்.

"திருவளர் தாமரை சீர்வளர் காவிகளீசர் தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்கு பைங்காந்தள் கொண்டோங்கு தெய்வ
மருவளர் மாலையொர் வல்லிபி னொல்கியன நடைவாய்ந்
துருவளர் காமன்றன் வென்றிக்கொடி போன்றொளிர் கின்றதே.

மறை : ஆகா ஆகா...... அச்சா அச்சா ...... நன்றி என்றும் நின்று நிலவுக .. (மறைதல்)

மணி : ஐயகோ ...... என்ன இது? எங்கே அந்தணர் — ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதிய அந்தணர் எங்கே ...... மாயமாக எங்கே மறைந்துவிட்டார்......? ஆ ... ஆம் — தில்லையிற் கூத்தரே எல்லையில் கருணையால் அருள் உருவத்திருமேனி தாங்கி வந்தனர் ...... தாயேயாகி வளர்த்தனை போற்றி! அருளா தொழிந்தால் அடியேனை அஞ்சேல் என்பார் ஆரிங்கு ......
(ஆனந்தக் களிப்பு)

## காட்சி 2

கனகசபை

மறை : முப்பத்து முக்கோடி தேவர்களே! நாராயணனே! நான்முகனே!! எல்லோரும் இங்கே வாருங்கள் ...... நம் தமக்கு அடிமை பூண்டவன் ஒருவன் நயந்து சொன்ன இந்த நற்பாடல் கேண்மின்கள் ...... கேண்மின்கள் ...... (பாடுதல்)
(பின்னர் வாசகம் வரைகிறார்.)

மறை : மெய்த்தவ வாத வூரன் விளம்பிட எழுதும் இந்தப் புத்தகம் மன்றுள் பஞ்ச கிருத்திய நடனஞ் செய்யும் அழகிய திருச்சிற்றம்பலமுடையான் கை எழுத்து ஆகும். "ம்" (சிரிப்பு) அச்சா ...... நீங்கள் யாபேரும் உங்கள் பதங்களுக்குச் செல்லுங்கள் ......! (தேவர்கள் சென்ற பின்பு.) நண்புடைய வாதவூரரின் நற்றவத்தை உலகிற்கு உணர்த்த இந்தப் புத்தகங்களை மைக்காப்பிட்டுப் பஞ்சாக்கரப் படிமீது வைப்போம் ......... (புத்தகத்தை வைத்து மறைதல்)

அந்தணர் : (வந்து பார்த்து) என்ன அதிசயம்! நாம் அர்த்த சாமப் பூசை முடித்து, திருக்கதவம் திருக்காப்புச் செய்தபோது இல்லாத புத்தகம் இப்பொழுது இங்கிருப்பது அற்புதம்; தெய்விகம். இது நிச்சயம் திருவருட் செயலேயாகும். (வணங்கிக் கண்ணீர் சொரிதல்) திருவருட் கருணை இருந்தவாறு என்னே! நாம் இந்த அதிசயத்தைத் தில்லை உள்ளார்கட் கெல்லாம் தெரிவிப்போம். ...... யாரப்பா ......

ஒருவர் : கூடிவருதல் தில்லை நகரிலுள்ளார்க்கு எல்லாம் இதை ஓடிச் சென்று சொல்...! வண்படி மீது புத்தகம் ஒன்று திருவருள் ஆணையால் வந்திருக்கிறது என்ற செய்தியைச் செப்புவாய்!

ஒருவர் : திருவருள் ஆணைப்படி. (சொல்லுதல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணர் : நடராசா— !, நடன சபேசா!, சிற்சபேசா!, சிதம்பரேசா! உன் அருள் விளையாட்டை ஆர் அறிவார் ஐய......!

(எல்லோரும் ஓடி வந்து வந்து பயபக்தியோடு புத்தகத்தைப் பார்க்கிறார்கள்)

எல்லோரும்: அதிசயம் — —

,, : அற்புதம் —...

,, : சிதம்பரேசா ....—

ஆதிசைவர் : எங்கள் நடேசர் உறையும் மன்றுள் அர்த்த சாமப் பூசைக்குப் பின் தேவர்களும் புகுத ஒண்ணாது! இது பெருந் தெய்விகச் செயலேயாகும்.

அந்தணர் : நம்மீது கொண்ட பெருங் கருணையினால் சிதம்பரேசர் தந்த சிவாகம நூல்தானோ அல்லது சங்கத்தில் வைத்து ஆராயப் பெற்ற குற்றமற்ற தமிழ் நூல்தானோ என்று பார்ப்பது தகுதியானது!!

எல்லோரும்: ஆம். அதுவே தகுதியானது —... வயதிலும் அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ந்த சிவப்பழமாகத் திகழும் ஆதி சைவரே! ஆராய்ந்து பார்க்கட்டும்!!

அந்தணர் : அவரே பார்க்கட்டும்!!

ஆதிசைவர் : உங்கள் எல்லோருடைய ஏகோபித்த முடிவும் ஒன்றேயானால் அதையே செய்வேன்!! (கை நிறைந்த பூக்களை இட்டு வணங்கிப் புத்தகத்தைச் சேமம் நீக்கிப் படித்தல்.)

ஆதிசைவர் : திருச்சிற்றம்பலம். சிவபுரா்ணம்: நமச்சிவாய வாஅழ்க! நாதன்தாள் வாழ்க! இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
உயர்வாத வூரன்மொழி தரித் தெழுதும் அம்பலவன் எழுத்து.

எல்லோரும் : ஈட்டிய மெய்த் தவமுடையோர் இயம்பிய இத்தமிழன்றி வீட்டுக்கு நெறிக்கு இனிச் சிவநூல் வேறு ஒன்றும் உளதோ... இல்லை— இல்லை— இல்லை...

ஆதிசைவர் : இதன் அரும் பொருளும் அவரே சொல்ல இந்நூற் பொருளாம் புதுத் தேனை நாம் நுகர்வோம் ...

எல்லோரும் : அப்படியே வாருங்கள் ... அருந்தவரிடம் செல்வோம் (ஆதிசைவர் புத்தகத்தைச் சிரமேற்றாங்கி முன்செல்லப் பின்னே எல்லோரும் செல்லுகிறார்கள்.)

அந்தணர் : நடராசா! நடனத்திற்காக ராசா! நமக்கும் ராசர்தான்! சிதம்பரத்தை நினைப்பவர்களுக்கும் நீ ராசாவேதான்! (தொண்டு செய்யத் தொடங்குகிறார். மணிவாசகப் பெருமான் முன்னே வரச் சென்றவர்கள் எல்லாம் பின்னே வருகிறார்கள்.)

ஆதி : தில்லையில் எம்பெருமானைச் செப்பிய இத் தமிழ் மாலை நல்ல அரும் பொருள் கேட்டோம்.

எல் : ஓங்கு புகழ்த் திருவாதவூரன் உறையும் எம்பெருமானும் தேங்கிய மெய் சிவஞான சிந்தையுடன் களி கூர்ந்து பூங்கனகப் பொதுவெதிரே போய்ப் புகல்வேன் என வந்துள்ளார்கள்!!

ஆதி : எல்லோரும் ஐந்துபேரறிவும் செவியாகக் கேட்போம்! அமைதியாக அமர்ந்து கொள்வோம்!!

மணிவாசகர் : அந்தணப் பெருமக்களே! ஆரா அன்பு மிக்க அடியவர்களே! நீங்கள் ஆராமையோடு கேட்க ஆவல் கொண்டிருக்கும் திருவாசகம், திருக்கோவை யார் என்னும் பனுவல்களின் பகர்தற்கரிய பருப்பொருளும் ஒன்றே. அது சொற்பதம் கடந்த சோதி ....— உணர்வு சூழ் கடந்து உணரும் பொருளை ஓசையால் உணர ஒண்ணாது ... உயிர்ப்பினால் உணருங்கள் – அப்பொருள் இதோ ...... இதோ ...— (நடராசப் பெருமானைக் காட்டிச் சென்று இரண்டறக் கலக்கிறார்.)

எல்லோரும் : சிவ சிவ சிவ சிவ ........—.......—.... அழுதடி அடைந்த அன்பன் அடியவர்க்கு அடிமை செய்வோம்!!

(திரை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

சந்தேகம் தெளிதல்

# இந்து மதம் சம்பந்தமான கேள்விகளுக்குப் பதில் கூறுகிறார்

மாவை ஆதீனகர்த்தா, மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்

1. கேள்வி : தீப ஆராதனை நிகழ்ந்த பின்பு, அத்தீபத்தை வாயினால் ஊதி அணைக்கின்றார்களே! இதனை எவ்வாறு தவிர்க்கலாம்?

பதில் : தீபங்கள் எதுவாயினும் வாயால் ஊதி அணைப்பது மகாகுற்றம். அந்தர் வாயு, பகிர்வாயு என்பதில் உடலுக்குள்ளிருந்து வெளிவருவது அந்தர்வாயு. இதிற் கரியமிலவாயுவோடு இன்னும் பிற அமில வாயுக்கள் கலந்திருக்கும். பகிரக்னிமூலம் மூர்த்தி தரிசனத்திற்காக ஏற்றப்பட்ட தீபங்களைப் பகிர் வாயுவினால்தான் அணைத்தல் நல்லது. விசிறி அல்லது வாயுவை ஏவக் கூடிய வஸ்துக்களின் துணைகொண்டு அத்தீபங்களை அணைக்கலாம்.

2. கேள்வி : ஆலயப்பிரகாரத்துள் அட்டாங்க நமஸ்காரம், பஞ்சாங்க நமஸ்காரம் செய்வது உகந்ததல்ல. ஆனால் கோபுர வாசலில் செய்யவேண்டும் என்று சிலர் கூறுகின்றனர் - இதற்கு விளக்கம் வேண்டும்.

பதில் : ஆலயப் பிரகாரத்துள் அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்களை ஸ்தம்ப மூல விநாயகர் முன்பாகச் செய்யலாம். பலிபீடத்திற்கெதிரேயும் செய்யலாம். ஆனால் ஏனைய இடங்களில் பிரகாரத்தினுள் செய்வது குறிப்பிடவில்லை. உட்பிரகாரத்தில் மேலே குறிப்பிட்டிருக்கும் இடங்களையும் சேர்த்து, அடியின்மேல் அடிவைத்து, கைகளைக் கூப்பியவாறு, சிவ நாமங்களை உச்சரித்துக்கொண்டு சிவத்தியானத்துடன் மனம், வாக்கு, காயங்களை ஒருவழிப்படுத்திக்கொண்டு மும்முறை பிரதக்ஷிணம் செய்வதுதான் முறை. பிரதக்ஷிணமென்றால், பிர = கோபமுதலிய நீக்கம்; த = மோக்ஷசித்தி; க்ஷி = மலநிவாரணம்; ணம் = திருவருட்பேறு. மனவன்போடு இறைவனைப் பிரதக்ஷிணம் செய்வோர் ஆணவ மலங்கள் நீங்கப்பெற்று, பாவங்கள் அழியப்பட்டு, மலநிவாரணமாகி திருவருட் செல்வத்தால் மோக்ஷ சித்தியடைவர் என்பது ஆகம விதி.

3. கேள்வி : அதிகமான பக்தர்கள் ஆலயப் பிரதக்ஷிணம் செய்யும்போது அதாவது உள்வீதி வலம்வந்து, எழுந்தருளி இருக்கும் விக்கிரகங்களை வணங்கி, கையோடு சண்டேஸ்வரரையும் வழிபட்டுப் பின் நவக்கிரகங்கள், சந்தான கோபாலர், வைரவர் ஆகிய மூர்த்திகளை வணங்குகின்றார்கள் – எப்போது சண்டேஸ்ரரை வழிபடுதல் வேண்டும் என்பது தெரிந்தும் இவ்வாறு செய்வது சரிதானா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் : மும்முறை பிரதக்ஷிணம் செய்தல் வேண்டும். இறுதிப் பிரதக்ஷிணத்தில்தான் சண்டேஸ்வரரை வணங்கல் வேண்டும். சிலர் ஒருமுறையே இறுதிப் பிரதக்ஷிணமாகக் கொண்டு சண்டேஸ்வரரை வணங்குகிறார்கள். இத்தகைய மார்க்கம் பிழையானது.

4. கேள்வி : அம்மன் ஆலயத்தில் எழுந்தருளி இருக்கும் சண்டேஸ்வரர் எதற்காக சண்டேஸ்வரி என அழைக்கப்படுகின்றார்?

பதில் : இலிங்கத்தில் பிரம்மபாகம், விஷ்ணுபாகம், உருத்திரபாகம் என மூவகையுண்டு. பிரம்மபாகம் நபுஞ்சகலிங்கமும், விஷ்ணுபாகம் ஸ்திரீலிங்கமும், உருத்திரபாகம் பும்லிங்கமுமாகும். ஆண், பெண் நபுஞ்சக ரூபமாகவுள்ளது. அவன், அவள், அதுவாக இருக்கும். உலகில் உயர்திணை, அஃறிணைப் பொருளெல்லாம் தம்மால் தோன்றி ஒடுங்குகின்றன என்பதை இவை உணர்த்தும். அர்த்தநாரீஸ்வரராக இறைவன் விளங்கும்போது சிவம் சக்தியாகக் காட்சி தருகிறான். எனவே சிவார்ப்பணமாகப் பக்தன் தனது வழிபாட்டை அர்ப்பணிக்கும்போது அது சிவனுக்கும் உமைக்கும் சேர்த்தே வழங்கப்படுகிறது. அதேபோன்று ஈஸ்வரி வடிவில் சண்டேஸ்வரரைப் பூசித்து ஆங்கு பூசா பலனை அர்ப்பணிக்கும்போது அதுவும் ஈஸ்வரன் ஈஸ்வரியிடம் ஒப்படைத்ததேயாம். எனவே ஈஸ்வரன் ஈஸ்வரி மூர்த்தங்களில் சண்டேஸ்வரரை வழிபடுதல் குறையில்லை.

இருந்தும் ஈஸ்வரப்பேற்றை இறைவன் சண்டேஸ்வரருக்கு அளித்தமையை எண்ணும்போது, சண்டேஸ்வரருக்கு சிவார்ப்பணம் செய்யின் அதுவும் ஈஸ்வரிக்கும் செய்ததாகவே அமையும்.

5. கேள்வி : சுவாமிக்கு ஆராதிக்கப்படும் பலவிதமான தீபங்களின் வேறுபாடுகளும் விதிமுறைகளும் பற்றிய விளக்கம் தரவும்.

பதில் : ஏராளமான தீபாராதனைகள் சிவாகமங்களிலுண்டு. அவை ஏராளமான கருத்துப் பரிமாறல்களைக் கூறும். சிலவற்றைக் கூறுவோம். பஞ்சகலைகளை உணர்த்தி இதுவே என் சாரூபமென விளங்க வைப்பது ஐந்து அடுக்குள்ள அலங்கார தீபம்; முத்தத்துவங்களை உணர்த்துவது மூன்று அடுக்குத் தீபம்; இத்தீப தரிசனங்களால் ஆன்மசித்தி யேற்படும். புத்திர விருத்திக்காக நாகதீபமும், பசு விருத்தியின் பொருட்டு இடப தீபமும், சர்வசித்தியின் பொருட்டுப் புருஷ தீபமும், ரோக நிவாரணங்களுக்கு நக்ஷத்திர தீபமும், வித்தைவிருத்தி, மலநாசம் என்பவற்றிற்காக கும்ப தீபமும் ஐந்து தட்டுத் தீபமும், சாரூப பதவியின் நிமித்தம் தூபமும், இரட்சை, தோஷ பரிகாரம் என்பதற்காக விபூதியும், பேரானந்தப் பெருவாழ்வுக்காக பஞ்சாராத்திரி தீபமும் தரிசனத்திற்காக ஆராதனைகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

6. கேள்வி : விபூதிப் பிரசாதம் தந்த பின்பு தீர்த்தம் தருகின்றார்கள். இதனை எவ்வாறு அருந்துதல் உத்தமம்? சிலர்-சிரசில் விட்டபின்பு எஞ்சிய தீர்த்தத்தை அருந்தவேண்டும் என்கின்றனர் - விளக்கம் தரவும்.

பதில் : 'தீர்த்தம்' என்பது மகா ஔஷதம். "கங்கையே! இப்போதே நீ என்னை ஆட்கொள்" என்று தன்னைக் கங்கையிடம் அர்ப்பணிப்பது ஆகும். விபூதி பூசியதும் உடல் ஸ்பர்ச தீட்சையை அணுகுகிறது. அவ்வுடலைக் கங்கையேற்கவைக்கிறது. எனவே, உட்கொள்வதுதான் சிறந்த மார்க்கம். அங்கே சகலமும் அடங்குவதால், சிரசிலோ அல்லது வேறு உடற்பகுதியிலோ தீர்த்தத்தைச் சேர்ப்பதில் அர்த்தமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கேள்வி : விரத நாட்களில் ஆலயத்தில் அளிக்கப்படும் பஞ்சாமிர்தம், அமுது - இவைகளை ஏற்று உண்ணலாமா?

பதில் : இறைவனது பிரசாதங்கள் மலநிவாரணத்தையும், பாபநாசங்களையும், செல்வத்தையும், தீர்க்காயுளையும் தரவல்லன. பல்வகையான செயற்பாடுகளோடு பக்தன் சங்கல்பித்து விரதத்தை அநுஷ்டிப்பதே வழமை.

"கர்த்தவ்ய விஷயே நியத: ஸங்கல்ப: வ்ரதம்"

அதாவது தான் செய்யவேண்டிய விஷயத்தை உறுதியாக மனதில் தீர்மானம் செய்வதே "விரத"மாகும். மனவுறுதிக்குப் பஞ்சப்புலன்களையும் அடக்கும் மார்க்கமாகக் கொண்டிருக்கும் உபவாசம் போன்ற நியமங்கள் வேண்டியதே.

8. கேள்வி : காலணி அணிந்துகொண்டும், தலையில் தொப்பி போட்டுக் கொண்டும் ஆண்டவனுக்கு மலர்கள் கொய்யலாமா? இவ்வாறு எடுக்கப்படும் பூக்கள் அர்ச்சிப்பதற்கு ஏற்றதா?

பதில் : சைவப் பண்பும் சைவக் கலாசாரமும் சைவத்திற்கே உரியன. பறங்கிக் கலாசாரம், பறங்கிப் பண்புகள் பறங்கியற்கேயுரியன. எனவே காலணிகளோடும், காற்சட்டை, தொப்பிகளோடும், பீடி, சிகரெட் புகைத்துக் கொண்டும், உடற்சுத்தியின்றியும் மலர்கள் கொய்து, அர்ச்சிப்பதற்கு உதவுவது மகா பாதகமாகும். இவை சைவ கலாசாரத்தை நையாண்டி பண்ணும் செயல்பாடாகும்.

9. கேள்வி : சுவாமிக்கு அபிஷேகம் நடைபெறும்போது கும்பிடலாமா?

பதில் : சுவாமிக்கு அபிஷேகமாகும்போது அபிஷேக தரிசனத்தால் பேறுகளைப் பெறலாம். தீபாராதனையின்போது தரிசனமும் வணக்கமும் செய்யலாம்.

10. கேள்வி : ஆலயத்துள் இருக்கும் மூர்த்திகளின் கதவுகள் சாத்தப்பட்டிருக்கும்போது அவர்களை வணங்கலாமா?

பதில் : ஆலயக் கதவுகள் சாத்தியிருக்கும்போது எதுவித வழிபாடுகளும் செய்வதில் பலனில்லை.

11. கேள்வி : தூபிமீது வளரும் சில செடி கொடிகளை, தூபிமீது ஏறி அகற்றுவது தவிர்க்கப்படவேண்டுமென்று கூறுகின்றார்கள் - எதற்காக?

பதில் : தூபியும் ஒரு லிங்க சுவரூபமே. தூபியில் தோன்றும் செடி கொடிகளை அகற்றுவதும் சிவபுண்ணியம். இதனைச் செய்வதற்கு, ஏதாவது துணைகளோடு சாரங்கள்கட்டி அச்செடி கொடிகளைக் கைகளால் தீண்டி முளையிலேயே அகற்றல் வேண்டும். தூபிமீது பாதங்கள் வைப்பது ஆகாது.

---

## பசியும் ருசியும்

ருசிக்கு உண்ணும் உணவினிலே நோய்கள் வளர வழியுண்டு. பசிக்கு உண்ணப் பழகிவிடின் படரும் நோய்கள் அண்டாது. ஒருமுறை ஒருநாள் உண்பவனை உயர்ந்த யோகி என்றிடலாம். பருகும் நீரும் உணவாகும். பாங்குடன் உடல்சீர் பெற்றிருக்கும். இருமுறை ஒருநாள் உண்பவனும் இனிமை விரும்பும் யோகியாம். திருவுடல் பருவுடல் என மாற தேகம் பெருத்து வாழ்ந்திருப்பான். மும்முறை உண்டு வாழ்பவனோ முற்றிலும் ரோகி எனப்படுவான். பலமுறை ஒருநாள் தின்பவனைப் பார்த்தால் துரோகி என்றிடலாம். நலமும் வளமும் துறந்தவனோ நாளும் நோயில் நலிந்திடுவான். உண்ணும் உணவே மருந்தாக உலகில் வாழக் கற்றுவிடில் விண்ணும் கைப்பட வாழ்ந்திடலாம். விதியை மதியால் வென்றிடலாம்.

தொகுப்பு: க. கனகராஜா

ஆதாரம் - கிராமராஜ்யம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இந்து தர்மம்" சஞ்சிகை

## அச்சிட நிதி உதவியோர்

மலர் 1 : திரு. ந. தெய்வேந்திரன்

மலர் 2 : உடுவில் வாழ் இந்து சமய அபிமானிகள்

மலர் 3 : நல்லூர் வாழ் இந்து சமய அபிமானிகள்

மலர் 4 : இணுவில் வாழ் இந்து சமய அபிமானிகள்

மலர் 5 : பருத்தித்துறை வாழ் இந்து சமய அபிமானிகள்

மலர் 6 : சுன்னாகம் வாழ் இந்து சமய அபிமானிகள்

மலர் 7 : திருநெல்வேலி வாழ் இந்து சமய அபிமானிகள்

மலர் 8 : குப்பிழான் வாழ் இந்து சமய அபிமானிகள்

மலர் 9 : திரு. ஆறுமுகம் சிவரத்தினம்
ஸ்தபதி ஆறுமுகம் சிற்பாலயம். திருநெல்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமயப் பேரறிஞர்களுக்கு

# ★ ஓர் அன்பா வேண்டுகோள் ★

யாழ்ப்பாணம்

எமது மதத்தின் பெருமை களைத் தாங்கி நிற்கும் கருத்துக்கள் அடங்கிய தங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

★ ★ ★

## அன்புள்ள இந்து மக்களுக்கு

இந்தச் லஞ்சிகையின் வளர்ச்சிக்கு உங்கள் சதரவைக் கோருகின்றோம்.

★ ★ ★

---

விற்பனையாகும் இடங்கள் : பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.
குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை.
சிவம் மெடிக்கல், சாவகச்சேரி.
மில்க்வைற் தொழிலகம, யாழ்ப்பாணம்.
இந்து சமயப் பேரவைத் தலைமைச் காரியாலயம:
375, கோயில் வீதி, நல்லூர்.

---

இச்சஞ்சிகை, யாழ். இந்து சமயப் பேரவைச் செயலாளர் திரு. சி. சக்திகிரீவன் அவர்களால், ஏழாலை, மஹாத்மா அச்சகத்தில் அச்சிடப்பட்டு, 11 - 07 - 95 இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org